இணைப்பு I

[667ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 480-க்கான விடையைக் காண்க]

(அ) ஆம்.

(ஆ) பொள்ளாச்சியிலுள்ள நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம் 10 ஏக்கரா குத்தகை நிலத்தில் குறைந்த பணியாளர்களைக் கொண்டு இயங்கி வந்தது. குத்தகைப் பணத்தை அதிகரிக்கவும், நிலத்தைக் காலிசெய்து கொடுக்கும்படியும் நிலத்தின் இரு சொந்தக்காரர்கள் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர்.

இந்திய வேளாண்மை கழகத்தின் நிதி உதவியுடன் இந்நிலையம் கடலை பற்றிய பலநோக்கு ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்பட்டு, கூடுதலான பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கூடுதலான பணியாளர்கள் திறம்பட ஆராய்ச்சிகள் நடத்துவதற்குப் போதுமானதாக இந்நிலப்பரப்பு இல்லை. அதிகமான நிலங்களை தற்பொழுதுள்ள நிலங்களுடன் இணைப்பதற்கு வாய்ப்புகளும் இல்லை. ஏனெனில் நகர் விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் இவ்வாராய்ச்சி நிலையத்தின் நிலங்கள் நகர்ப்புற நிலங்களாக மாற்றப்பட்டு விட்டன. மேலும் பருவ மழை தவறுவதால் பயிர் வகைகள் அழிந்து அப் பொருட்களை இழக்கவும் நேரிடுகிறது. கூடுதலான பணியாளர்களை அமர்த்தியும் நல்ல தண்ணீர் வசதியைக் கொண்டும் பயிர் விளைச்சலை அதிகரிக்கும்படி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் வற்புறுத்தி வருகிறது. இந்த வசதிகள் தற்போது இந்த ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடத்தில் இல்லையென்பதால் இவ்வசதிகள் நிறைந்த வேறு ஒரு இடத்திற்கு இந்த நிலையத்தை மாற்ற வேளாண்மைப் பல்கலைக் கழகம் முடிவு செய்தது.

ஆயினும் கூடிய விரைவில் பொள்ளாச்சி அல்லது அதன் சுற்றுப்புறத்தில் பொருத்தமான நிலங்களைத் தேர்ந்தெடுத்து இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ வேண்டுமென்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.